*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

**ISSN: 2456 – 4613**
**Volume VIII (1)**
**December- 2023**

# கடல்அடி புதினத்தில் பாத்திரப் படைப்புகள்

விந்தியகௌரி, பொ.
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
வே.வ.வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding Author's mail id:** vinthiyagowri@vvvcollege.org

**ஆய்வுச் சுருக்கம்**

புதினத்தில், பாத்திரங்களை உருவாக்குவதும் அப்பாத்திரங்களின் இயக்கத்தால் ஏற்படும் உணர்வு நிலையைக் காட்டுவதும் அப்பாத்திரங்களுக்கே உரிய சிறப்பு பண்பினை எடுத்துக்காட்டுவதும் முதன்மை பெறுகிறது. நெய்தல் நிலத்திற்கே உரித்தான கடற்கரையையும், அதைச் சார்ந்து வாழும் கடலோர மக்களையும் அவர்கள் வாழும் வாழ்க்கை முறையையும் தொழிலையும், கடலுக்குள்ளே நிகழும் நிகழ்ச்சிகளையும், கடலோரக் கிராமங்களில் அவ்வப்போது நிகழும் உரிமை சார்ந்த பிரச்சினைகளையும் கடல்அடி புதினத்தில் பதிவு செய்துள்ளார் சி.பெர்லின். இவர் படைத்த கடல்அடி புதினத்தில் மீனவர்களின் மனங்கள் கடல் போல் மிக ஆழமானவை. கடல் பரப்பைப் போல் விசாலமானவை என்பதை அவர் படைத்த பாத்திரப் படைப்புகளான பெருவீரன் இன்னாசி, நிர்மலா, சேவியரின் மூலம் நம்மை உணரச் செய்திருக்கிறார். இப்படைப்பின் மூலம் நெய்தல் நிலக் காதல், மீன்பிடித் தொழில், நற்பழக்க வழக்கம் போன்ற பண்புகளால் ஒரு சமுதாயத்தின் பழக்க வழக்கத்தை தாம் படைத்த பாத்திரப் படைப்புகள் மூலம் வெளிக்கொணர்வதை இப்புதினத்தின் வாயிலாக உணரமுடிகிறது.

**கருச்சொற்கள்**

**கடல்அடி, பாத்திரப் படைப்புகள், இன்னாசியின் வீரம், மனிதநேயம், நிர்மலாவின் காதல், சேவியரின் மீன்பிடித்தல் தொழில், பாத்திமாவின் பரிதவிப்பு, மீனவர் வாழ்க்கை.**

## முன்னுரை

புதினம் என்பது ஒரு குறிப்பிட்ட மக்கட் கூட்டத்தினருடைய செயல்பாடுகளின் வெளிப்பாடு மட்டுமல்ல. அது ஒரு காலகட்ட உணர்ச்சிகளின் வெளிப்பாடும் கூட. வாழ்க்கையினின்று புதினம் தோன்றுகிறது. அதனால் அது வளர்கிறது. மனிதன் கூட்டங் கூட்டமாக வாழத் தொடங்கி இன்னொரு வரை இன்னொன்றை அறிய முற்பட்டபோதே

படைப்பிலக்கியம் தோன்றிவிட்டது. தம் எண்ணத்தை கருத்துகளாக வெளியிடும் ஆர்வம், பிறரிடத்திலும் பிறவற்றிலும் காட்டுகின்ற ஆர்வம், கற்பனை ஆற்றலின் வளர்ச்சி ஆகியவையே படைப்பிலக்கியத்தைத் தோற்றுவித்தன. சி.பெர்லின் எழுதிய கடல்அடி புதினம் கடல்புற மீனவர்களின் முரட்டுத்தனம் நிறைந்த வாழ்வு, வாழ்வில் எழும் மோதல்கள் மோதல்களில் பற்றி எறியும் வெறி, வெறியினுள்ளே பொங்கி எழுகிற மீனவர்களுக்குரிய தூய அன்பு, மானுட மாண்பு, ஆன்மப் பேரழகு, தொழில், மனிதநேயம் போன்றவற்றைச் சித்திரிக்கிறது. இவற்றை இன்னாசி -நிர்மலா, சேவியர் - பாத்திமா ஆகியோரின் பாத்திரப் படைப்புகள் வழி ஆராய்வதே கட்டுரையின் நோக்கம்.

**இன்னாசியின் வீரம்**

புதினத்தில் சிறப்புமிக்கதும், நெஞ்சைக் கொள்ளை கொள்ளுவதுமான பாத்திரங்களைப் படைப்பது என்பது புதினத்தின் சிறப்பாகும். படைப்பாளர் சிறந்து விளங்குவதற்குப் பாத்திரப் படைப்புகள் இன்றியமையாத கருவியாகத் திகழ்கின்றன. “பாத்திரம் என்பது ஒரு தனித் தன்மை வாய்ந்த பண்புகளை இயல்பாகவோ அல்லது பழக்கத்தினாலோ பெற்றிருக்கும் இப்பண்புகளை மற்றவரிடமிருந்து அவர்களைப் பிரித்துக்காட்டும் தண்மை வாய்ந்தது. ஒரு தெளிவான தன்மை (பண்பு) அவருடைய புகழால் அவருக்கு அமைக்கப்பட்டிருக்கும்” என்று வெப்ஸ்டர் அகராதி விளக்கியிருக்கிறது. இந்தத் தனித்தன்மையான பண்புகளை விளக்க வருவனவே நிகழ்ச்சிகள் இதனைக் கடல்அடி புதினத்தில் இன்னாசி என்ற கதாப் பாத்திரத்தின் மூலம் படைப்பாளர் எடுத்துக்காட்டுகிறார்.

இளந்தாரியான பெருவீரன் இன்னாசி சிறுபிராயத்தில் இருந்தே அப்பா மிக்கேல் பிள்ளையுடன் கட்டுமரத்தில் தொழிலுக்குப் போய் தொழிலில் பழுத்து தனியாக ஒரு கட்டுமரத்தில் தொழில் செய்யும் அளவிற்கு வளர்ந்து விட்டதால் அவனுக்கான யாத்தினங்களை அவனே உருவாக்கினான்.

“அவனுக்கு வாச்சதுபோல மரமும், தொளவையும் இந்த ஜென்மத்துல யாருக்குமே வாச்சாது. மிக்கேல் பிள்ளை இன்னாசிக்கின்னு நட்டு வளத்துன மரமும் மூங்கிலும்”[1] (கடல்அடி, ப.4) என்று அவன் காதுபட மற்றவர்கள் பேசுவதைக் கேட்டு நெஞ்சை நிமிர்த்துவான் இன்னாசி.

கேரளாவில் இன்னாசி ஒரு ஒறத்தஸ்றாங்கு. “இங்க நான் செய்யுற தொழிலுல மொதலாளியும் நான்தான், தொழிலாளியும் நான்தான். யாருகிட்டயும் கைகட்டி அடிமை வேலை செய்யாண்டாம். மோதலாளி கிட்ட கூலிவாங்குற கூலிக்காறனா நிக்கண்டாம். கெடைக்கிற வருமானத்த பங்குவச்சு பகிர்ந்து எடுக்குகிற தொழில் தான் எங்க மரத்தொழிலு.” என்ற வரிகள் இன்னாசியாரும் தன்னிடம் அதைச் செய் இதைச் செய் என்று சொல்லுவதற்கு முன்பே எல்லா வேலைகளையும் செய்து

முடிப்பான் என்ற தன்மையை அறிய முடிகின்றது.

‘‘போட்டுல உள்ள மொத்த வேலையையும் ஒத்த ஆளா நின்னு செய்வான்”. அவன் வேலையைப் பார்க்கிறவர்கள் கண்டிப்பாக இப்படி ஒரு வார்த்தையைச் சொல்லிக் கொண்டுதான் போவார்கள். ஒரு கட்டத்தில் இன்னாசி இல்லையென்றால் ஒன்றும் நடக்காது என்று எல்லோரும் உணர்ந்தார்கள். அவர்கள் போட்டு முதலாளி, இன்னாசிக்கென்றே இரண்டாவது ஒரு போட்டை அவன் விரும்பியபடி கட்டி அவனை அந்தப் போட்டுக்கு ஸ்ராங்கு ஆக்கினார். போட்டுத் தொழிலுக்கு வந்து சேர்ந்த இரண்டு வருசத்திலேயே ஸ்ராங்க் ஆன வரலாறு இதுவரை நடந்ததில்லையென்று இன்னாசியை எல்லோரும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். மீனவர்கள் கூற்று வழியாக இன்னாசி தனித்தன்மை நிறைந்தவன் என்பதை அறியமுடிகிறது.

பொதுவாக மனிதர்களின் இயல்புகளாலேயே நிகழ்ச்சிகள் தோன்றுகின்றன. பல்வேறு நிகழ்ச்சிகளைத் தோற்றுவிக்கும் மனிதர்களையே கதைப்பாத்திரம் என்று கூறுவர். “புறஉலக நிகழ்ச்சிகளைத் தெரிந்தெடுத்து விவரித்து அவற்றினூடாகப் பாத்திரங்களின் உணர்வுப் படிவங்களைப் புலப்படுத்துவது யதார்த்த இலக்கிய நெறியாகும்”[2] (தமிழ் நாவல் இலக்கியம், ப.239) என்கிறார் க.கைலாசபதி. இதனை இவர் படைத்த இன்னாசி என்ற பாத்திரத்தின் மூலம் புதினத்திற்கு வலுசேர்ப்பதை கீழ்வரும் நிகழ்ச்சியிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

பனையூரிலுள்ள பெரியவர்களும் ஊர்க்கமிட்டிக்காரர்களும் சேர்ந்து செட்டியூருக்கும் பனையூருக்கும் இடைப்பட்ட ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குச் சாலை அமைக்கத்தடம் பிடிக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று திட்டம் போட்டார்கள். சாலை அமைக்க ஏற்பாடு செய்த இடம் சானல் புறம் போக்கு இடம். அதை இரண்டு பக்கமும் தென்னந்தோப்பு வைத்திருந்த மீனவரல்லாத மாற்றுச் சமூகத்தினர் ஆக்கிரமிப்பு செய்து அந்தப் புறம்போக்கு இடங்களில் தென்னை நட்டுக் காலங்காலமாக அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அந்த இடங்களை அனுப்பவித்துக் கொள்ள 2சி பட்டா பெற்று அதன் பலன்களை அனுபவித்து வந்தார்கள் என்பதையறிந்து இன்னாசி, இரவோடு இரவாக வேலியின் இரண்டு பக்கமும் எட்டு எட்டு அடி அளந்து அதற்கு இடையில் நின்ற முப்பத்துரண்டு தென்னை மரங்களைக் கோடாலியால் வெட்டி., வாளால் அறுத்து, போலீஸ் கேசை சந்தித்து, ஜாமீன் எடுப்பதும், கையெழுத்துப் போடுவதும், சரண்டர் ஆவதும் என்று பலமுறை ஸ்டேசனுக்கும், கோர்ட்டுக்கும் வந்திருக்கிறான் இன்னாசி. அதனால் எல்லா போலீசுக்கும் அவனை நன்றாகத் தெரியும். இங்ஙனம் சின்ன வயதிலே பலவழக்குகள் அவன் மேல் உள்ளது.

பாத்திரம் என்பது நிகழ்ச்சி: நிகழ்ச்சி என்பது பாத்திரத்தினுடைய விளக்கம் என்று

ஹென்றி ஜேம்ஸ் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். படைப்பாளர் இன்னாசியை அநியாயத்தைத் தட்டிக்கேட்கும் மாவீரனாகப் படிப்பவர் உள்ளத்தில் தெளிவாக விளங்கும்படி படைத்துள்ளார்.

**இன்னாசியின் மனிதநேயம்**

‘‘மனிதநேயம் என்பது மனிதருக்கு மனிதர் இருக்க வேண்டிய தொடர்புறவு பற்றிய ஒருவிதமான மனநிலை அந்த மனநிலையினால் தூண்டப்பட்டு நடைபெறும் செயல் நிலை’’[3] (சங்கத் தமிழரின் மனிதநேய மணிநெறிகள், ப.15) என்று சாலினி இளந்திரையன் விளக்கம் அளிக்கின்றார். இதனைத் தான் படைத்த இன்னொரு கதாப்பாத்திரத்தின் மூலமும் உணர வைத்திருக்கிறார் படைப்பாளர்.

நிர்மலா இன்னாசியின் மனைவி பாத்திமா சேவியரின் மனைவி. நிர்மலாவுக்கும் பாத்திமாவுக்கும் இடையே நடந்த மோதலில் சேவியர் குறுக்கிட்டு நிர்மலாவைக் கன்னத்தில் அறைந்து விடுகிறான். கேரளாவில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் இன்னாசி இக்கொடிய செய்தியை அறிந்து ஊருக்கு ஓடோடி வருகிறான். ஒரே அடியில் மண்டையை இரண்டாகப் பிளக்கும் அடிக்கம்பை கையில் வைத்துக் கொண்டு சேவியரைத் தேடுகிறான். அவன் கடலுக்குப் போயிருப்பதை அறிந்து கடற்கரையில் அவனுக்காக கோவத்துடன் காத்திருக்கிறான்.

‘‘எனக்கப் பெண்டாட்டிய... இந்தமிய்யல் அந்தோனிக்க மோவன் சேவியருகை நீட்டி அடிச்சிருக்கான். இன்னாசிக்க பெண்டாட்டிய ஒருத்தன் கைநீட்டி அடுச்சுதானன்னா அந்த அடிச்சகைய துண்டாக்காம இருந்த... அவனுக்க சீவனவாங்காம இருந்தா இந்த இன்னாசி ஒலகத்துல இருந்து என்னத்துக்கு...” இன்னாசி பல்லைக் கறும்பினான்.

கொந்தளிப்பான நேரம். கடல் கோரத்தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கிறது. சேவியர் கரையில் கால் வைத்ததும் அவனைக் கொல்ல வேண்டும் எனக் காத்து நிற்கிறான் இன்னாசி. என்ன செய்வது என்று தெரியாமல் ஊர் மக்கள் கடற்கரையில் குவிந்து நிற்கிறார்கள். சேவியரைக் காப்பாற்றக் கடலில் குதித்தான் இன்னாசி.

“இவனும் மாயிரியாவுக்கச் சுளுக்குல மாட்டுனானோ…. இப்பரண்டு உசுரு கடலுக்குள்ள….”

“இவன் லேசுல ஒண்ணும் ஆபத்துல மாட்ட மாண்டான். அவ்வளவு தந்தேடம் உள்ள ஆவீரன் இன்னாசி”.

‘‘அரமணி நேரமா இத்தனபேரு கடலுக்குள்ள எறங்குனாவே…. வெட்டுக்கு வெலங்கபோக முடிஞ்சுதா…. பாருஅங்க இன்னாசி, ரண்டு நிமிசத்துல கிட்டபோயாச்சு”.

அடுத்த இரண்டு நிமிடத்தில் சேவியர் மிதந்து கிடக்கும் இடத்தில் எழும்பினான் இன்னாசி. அடுத்த நொடியில் கையைத் தூக்கி அசைத்தான் இன்னாசி. அலை அடித்து ஒதுங்கிய இன்னாசியின் அடிக்கம்பு கேட்பார் கேள்வி இல்லாமல் கரை ஒதுங்கிக்

கிடந்தது என்று மனிதநேயத்தோடு மனிதர்கள் வாழ வேண்டும் என்பதைப் புதினத்தில் வலியுறுத்தியுள்ளார்.

உயிருள்ளவை போலத் தோன்றும் பாத்திரப் படைப்புடைய புதினமே சிறப்புடையதாய் மதிக்கப் பெறும். ‘‘பாத்திரப் படைப்பு என்பது விதிமுறைக்கு உட்பட்டதாகப் பெரிதும் விளங்குகிறது. பலரும் நன்கறிந்த பண்புகளால் அதன் வருணனை நிறைவு செய்யப்படுகிறது’’[4] என்பர் அம்பரிஸ். (A.R.Hump hereys, The Augustian World, P.47).

ஆண் பெண் உறவுக்குக் காதல் காரணம். காதலர் தம் மன ஒற்றுமையே அகப்புற வாழ்வின் உயிர்ப்பண்பு. தலைமகனுக்குரிய இலக்கணமாகத் தொல்காப்பியர் ‘‘பெருமையும் உரனும் ஆடு உமேன.’’ என்கிறார்.

காற்றும் புயலும் சேலுகேடும் உள்ள நேரத்தில், தொழிலுக்குச் செல்லப் பயந்து எல்லா மரங்களும் உயரே ஏற்றி பன்னாவைத்து மேய்ந்து வைத்திருக்கும் போது இவன் மட்டும் ஒற்றை மரமாக பெரிய பெரிய அலைகளை எதிர்கொண்டு தனி ஆளாகக் கடலுக்குள் சென்றது; பெரிய பெரிய கப்பலையே தூக்கி மறிக்கும் சேலு கேடில் நெம்மீன், வேளா, தள, கட்டா என்று மீன்களைப் பிடித்துக் கொண்டு வந்தது; பெரிய சேலுகேடில் மாட்டி மூன்று நாள் காணாமல் போய் நான்காம் நாள் ராமேஸ்வரத்தில் கரையேறி உயிர் பிழைத்து ஊர்வந்து சேர்ந்தது என்று மீனவர்கள் அவனுடைய வீரபராக்கிரமங்களைக் கூறக் கேட்டுக் கேட்டு உணர்ச்சிவசப்படுவாள். இப்படியும் ஒரு வீரன் இருப்பானா! இன்னாசியைப் பற்றிப் பேசாமல், கேட்காமல் அவளால் இருக்க முடியவில்லை. இதன் பெயர்தான் காதலோ... இதுவரை இப்படி ஒரு விசித்திர உணர்ச்சி தனக்கு ஏற்படவில்லையே. ‘‘இன்னாசியை நான் காதலிக்கிறேனோ! அடிக்கடி அவனையே நினைக்கத் தோன்றுகிறதென்றால் அது காதல் இல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்? அவனை நினைக்காமல் என்னால் வாழ முடியாதா?’’ என்று நிர்மலா தனக்குள் பலவாறு கேள்வி கேட்டுக் கொண்டாள்.

நிர்மலாவைப் பெண் கேட்கச் சென்ற பெற்றோரிடம் வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணமெல்லாம் பேசி முடித்து விட்டோம். ஆவணியில் கல்யாணம் என்று நாகரிகமாகப் பேசி உங்களுக்கு பெண் தரமாட்டோம் என்று சொல்லாமல் சொல்லி திருப்பி அனுப்பியதை அறிந்த இன்னாசி நிர்மலாவின் வீட்டுக்கு நேரே சென்று, ‘‘ஒன்னைய கல்யாணம் கட்ட தயாரா இருக்கேன், ஒன்னால எனக்கக் கூட வர முடியுமா? முடியாதா? முடியும்னா இப்பவே நீ எனக்கக் கூட வா’’ என்று அழைக்கவும் இதோ உமது அடிமை என்று உடுத்தத் துணியுடன் வீட்டைவிட்டு இறங்கி வந்தாள் நிர்மலா வீட்டிலுள்ளவர்கள் எவ்வளவோ தடுத்தும் கேட்காமல் இன்னாசியுடன் சென்று அவனைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதித்தாள்.

“என்கிட்ட அந்தப் புள்ள அப்படி என்ன விசேசத்தக் கண்டதுன்னு தெரியல்ல.

ஆனாலும் என்ன நம்பி எல்லா சொந்தத்தையும் உதறிட்டு வந்திருக்கா. என்னால முடிஞ்ச அளவுக்கு அவ நம்பிக்கைக்குக் கேடு வராத முறையில நடப்பேன். நான் ஊருல, பல காரியங்களுல முரடனா தெரியலாம். ஆனா அவளுக்கு நான் ஹீரோவா தெரிஞ்சிரிக்கேன். அதனால அவள கஷ்டப்படாத அளவுல வச்சு நான் காப்பாத்துவேன். மகாராணியா வச்சிருப்பேன்னு சொல்லமாட்டேன். ஆனா என் சம்பாத்தியத்துல கஞ்சியோ கூழோ குடிச்சிட்டு சந்தோசமா வாழுவோம்" என்று தனது மனதின் ஆழத்திலிருந்து ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்தான். இன்னாசியின் யதார்த்தமான பேச்சு திருப்தியைக் கொடுத்ததால் ஒரே பறையில் கல்யாணம் நடந்தது. ஒரே வீட்டிலிருந்து மாப்பிள்ளையும் பெண்ணும் கோலம் சமைந்துபோன காட்சி அந்த ஊரில் இது வரை நடைபெறாதது. எல்லோரும் வேடிக்கையாகப் பார்த்தார்கள். இருந்தாலும் மனதார வாழ்த்தினார்கள்.

**சேவியர்**

"புனைகதை இலக்கியத்திற்குக் கதைப்பொருள் முக்கியமானதாகும். படைப்பாளி மனதில் கதைப்பொருளே முதலில் இடம் பெறும். இதைத் தொடர்ந்து கதைமாந்தர்கள் இடம் பெறுகிறார்கள். இந்த இரண்டுமே சேர்ந்து கதைப் பின்னலுக்கு வழிகாட்டிச் செல்லுகிறது. Theme and Characters proceed plot என்பதே உண்மையாகிறது"[5] (நாவல் இலக்கியம், ப.29) என்கிறார். மா.இராமலிங்கம்.

ஒரு சமூகத்தின் அடையாளத்தை கதாபாத்திரம் மூலமாக புதினத்தில் வெளிக் கொணர்வது என்பது படைப்பாளரின் திறமையையும் இவர் இந்த சமூகத்தின் மீது வைத்திருக்கும் அக்கறையுமே ஆகும். தான் படைத்த கதாப்பாத்திரத்தின் மூலம் அச்சமூகம் படும் அவஸ்தையையும் மீன்பிடி தொழிலில் அவர்கள் சந்திக்கும் அச்சுறுத்தல்களையும் இயற்கையோடு இயைந்து அவர்களின் வாழ்க்கையைக் போராட்டத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை அழுத்தமாகக் கூறியிருப்பது இப்புதினத்தின் சிறப்பு ஆகும்.

கடலில் குளிர்ச்சி அதிகமாக இருந்ததால் பாரில் மீன்கள் அதிகம் குடிகொண்டிருந்தது. பாருக்கு அடியில் பதுங்கியிருந்த மீன்களெல்லாம் வெது வெதுப்பைத் தேடிமேல் பக்கம் வந்து கொண்டிருந்தன. சேவியர் தூண்டில் கயிறை கடலில் வீசப் பொறுக்கவில்லை. வெளமீன், பக்கோட்டி, வேளா, கொளுவை, சூரை, பளுதை, பாரை என்று எல்லா மரத்து மீனும் அவன் தூண்டிலில் கொளுவியது. றோளை இளக்குவதும், மீன் கொழுவுவதும், றோளை இழுத்து மீனைத் தூக்கி மரத்தில் போடுவதும், தூண்டிலில் இரை கொருத்து தயாராக வைத்திருக்கும் இன்னொருறோளை கடலில் வீசுவதும், இந்தத் தூண்டிலில் உள்ள மீனைக் களித்துகச்சாலில் போடுவதும், அந்தத் தூண்டிலில் இரை கொருப்பதற்குக் கூட அவகாசம் தராமல் இளக்கிய தூண்டிலில் மீன் கொளுவுவது

என்று அரைமணி நேரத்தில் பெரிய கோட்டுமால் நிறைந்தது என்பதிலிருந்து மீன் வகைகளையும் மீன்பிடிக்கும் விதத்தினையும் அறிந்து கொள்ள முடிகிறது.

ஒருவாரம் தொழிலுக்குப் போய் ஒருமீன்பாடும் இல்லாமலும், ஒருவாரம் சேலுகேடில் தொழிலுக்கும் போக முடியாமலும் கடன்பட்டும், பட்டினிகிடந்தும் இரண்டு வாரத்தைக் கழித்தவனுக்கு இப்படி அதிகமாக மீன் கிடைத்ததை நினைத்து ரொம்ப சந்தோசம் தான். விடியற்காலை பட்ட கஷ்டமெல்லாம் மீன்களைப் பார்த்ததும் பஞ்சாகப் பறந்து போச்சு. மனம் புதிய உற்சாகத்தில் துள்ளிக் குதித்தது. மீனவர்களின் மனநிலையை சேவியர் பாத்திரம் வழி படைப்பாளர் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்.

பாத்திமா தயார் பண்ணிவைத்த கஞ்சிப் பாத்திரத்தையும் தூக்கிக் கொண்டு வளையகச்சாவின் உள் வைத்திருந்த யாத் தினம் கயிறையும், றொள், தூண்டையையும் சரிபார்த்துக் கொண்டு, வெற்றிலைப் பாக்கு புகையிலைச் சுண்ணாம்பு எல்லாவற்றையும் எடுத்து மடிப்பெட்டியில் வைத்துவிட்டு, நாலஞ்சு தூண்டையையும் மரலையும் மடிப்பெட்டியின் மற்றொரு அறையில் வைத்து நிக்கருக்கு மேலே கட்டி வைத்த குத்தாலம் துண்டின் இடையில் மடிப்பெட்டியைச் சொருகிவைத்தான். சேவியரின் செயல்பாட்டிலிருந்து கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் உணவு உண்ணப் பொழுதில்லாமல் உழைக்கும் உன்னத நிலையை உணர முடிகிறது.

நீச்சல் அடிக்க கை கால்கள் எழும்பவில்லை. அடிக்கும் அலையில் மாட்டிவிடாமல் குளித்துக் கொடுத்து மீண்டும் எழும்பிவிட்டு… அடுத்த அலைக்கு மாட்டாமல் குளித்துக் கொடுத்து மீண்டும் எழுந்து மூச்சைவிட்டு… என்று மாறிமாறி செய்து மூச்சும் தளர்ந்து போயிக் கொண்டிருந்தது. அவன் உயிர் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரிவது அவனுக்கே தெரிந்தது. சேவியரை கடல் அலைகளுக்கு வெலங்கே இழுத்துக் கொண்டிருந்தது. எதிர் நீச்சல் போட எந்த சக்தியும் இல்லாமல் மிதந்து கிடந்தான்.

சுருட்டி அடித்த அலையில் மாட்டிய சேவியர் அந்த அடியின் சுளுக்கில் மாட்டி ராட்டைபோல் சுற்றினான். சுற்றிய வேகத்தில் வேறு யாராவது மாட்டியிருந்தால் மூச்சுத் தப்பிப்போய் அந்த நொடியிலேயே உயிர் பிரிந்திருக்கும். ஆனால் மூச்சுப் பிடிப்பதில் வல்லவனானதால் சேவியர் அந்தச் சுளுக்கில் கூட தட்டுப்பட்ட தரையில் காலை உந்தித்தள்ளி மேலே வந்தான். கடலின் மேல் பகுதியில் வந்து இழுத்துப் பிடித்து வைத்திருந்த மூச்சை மெதுவாக அவிழ்த்துவிட்டு மூச்சு வாங்கினான். சேவியரை இன்னும் உள்ளே இழுத்துக் கொண்டிருந்தது. மொத்தமும் தளர்ந்து விட்டான் சேவியர். படைப்பாளர் மீன் பிடிப்பதில் ஏற்படுகின்ற சிக்கலை விளக்கியுள்ளார்.

கடற்கரை மணலில் இறங்கியதும் கால் வழியாக குளிர் உடலுக்குள் புகுந்து எலும்பையே உருக்குவது போல் தெறித்தது.

நாலைந்து அடி எடுத்து வைப்பதற்குள் கால்கள் விறைத்துவிட்டது போல் ஒரு உணர்வு. கடல் அடியும் பெலமாக இருந்தது. ஒரு அலைக்கும் அடுத்த அலைக்கும் இடையில் இடைவெளியே இல்லாமல் அலை இடைவிடாமல் மடக்கி மடக்கி அடித்துக் கொண்டிருந்தது. அந்த அமைதியான வேளையில் கடல்அடி மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது என்று கடல்அடி நிகழ்வைக் கண்முன் காண்பது போல் படைத்துள்ளார்.

**முடிவுரை**

ஒரு படைப்பாளரின் கலைத்திறனை விளக்கிக் கூறுவது பாத்திரப் படைப்பே. மனிதர்களுக்கு இயற்கை பற்றியும் இயற்கையோடு இயைந்த மனிதவாழ்வு பற்றியும் அறிந்து கொள்வதில் ஆர்வம் மிகுதியாக உள்ளது. இவ்வகையில் கடல்அடி புதினம் மக்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றது. படைப்பாளர் கதை மாந்தரின் பண்பு நலன்களைப் படிப்படியாக வளர்த்துள்ளார். கதை நிகழ்ச்சிகளையும் காட்சிகளையும் துணை மாந்தர்களையும் பாத்திரப் படைப்புக்குப் பயன்படுத்தியுள்ளார். கடல்புரத்தில் வாழும் மீனவர்களின் வாழ்வு நிலையை எடுத்துரைப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களின் அன்பின் வெளிப்பாட்டினை எடுத்துரைப்பதாகப் புதினம் அமைந்துள்ளது. மீனவர் குடும்பம் மற்றும் கிருத்துவர்களின் சமயச் சூழலை மையப்படுத்தி படைக்கப்பட்டுள்ளது. கடல்அடி புதினமானது மீனவர்களின் வாழ்க்கைச் சூழலானது பொருளாதார நிலையினை மையப்படுத்தியும் மண் மற்றும் உறவுகளுக்கிடையே உள்ள போராட்டமே புதினத்தில் கதைக் கருவாக அமைக்கப்பட்டுள்ளது அனுபவங்களைக் கொண்டு நன்றாகச் சிந்தித்து எழுதுவது தான் நல்ல படைப்பாக அமையும். படைப்பாளர் தாம் கண்டதையும் கேட்டதையும் பிறர் காணவும் கேட்கவும் கூடும் வகையில் சிந்தித்துப் படைத்துள்ளார். மீனவர் சமூகத்தில் நிகழும் பல நிகழ்வுகளை அப்படியே புதினத்தில் எடுத்துக்காட்டுவதில் சி.பெர்லின் சிறப்பிடம் வகிக்கிறார். ஒழுக்க உணர்வே நாகரிகம் வாய்ந்த மனித இனத்தை வலிமை பெறச் செய்ய வல்லது என்பதைக் கடல்அடி புதினம் மூலம் உணர்த்தியுள்ளார்.

**அடிக்குறிப்புகள்**


1. பெர்லின் சி (2020). குறும்பனை கடல்அடி நியூ செஞ்சுரிபுக்ஹவுஸ் லிட், சென்னை.
2. கைலாசபதி க (1999). தமிழ் நாவல் இலக்கியம் குமரன் பப்பிளிஷர்ஸ், சென்னை.
3. சாலினி இளந்திரையன் (1995). சங்கத் தமிழரின் மனிதநேய மணிநெறிகள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
4. Humphereys AR (1954). The Augustian World, Mathuen and Co.Ltd, London.
5. இராமலிங்கம் மா (1975). நாவல் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.